2019/2020

ரெடிங் தமிழ் கல்விக்கூடம்

Reading Tamil School

# வளர் தமிழ் 6

## பயிற்சி 5

பெயர் ________________________________

www.readingtamilschool.co.uk

admin@readingtamilschool.co.uk

1. **பேச்சுப் பயிற்சி**

பின்வரும் தலைப்புத் தொடர்பாக 2 மணித்துளிகள் தொடர்ச்சியாகப் பேசவும்.

***‘ தமிழ் மொழி ’***

2. **வாசித்தல்**

**பூவகை**

பூக்களை நீலப்பூ, கொடிப்பூ, கோட்டுப்பூ என வகுப்பர். தாமரை ஒரு நீர்ப்பூவாகும். இது குளங்கள் மற்றும் ஓடைகளில் உள்ள சேற்றில் வளரும். தாமரை நீரின் மேல் தனது இலைகளைப் பரப்பி நிற்கும். தாமரை மொட்டுகள் கூம்பு வடிவானவை. இதன் பூக்கள் வெள்ளை, இளஞ்சிவப்பு நிறங்கொண்டவை. தமிழ் இலக்கியங்களில் தாமரை பற்றிய செய்திகள் உள்ளன. தாமரை போன்றே அல்லியும் ஒரு நீர்ப்பூவாகும். இது இலைகளின் நடுவே பூக்கும். பூவின் நடுப்பகுதி மஞ்சள் நிறமாக இருக்கும். இலைகள் வட்டவடிவமானவை. கொன்றை கோட்டுப்பூ வகையச் சேர்ந்தது. இது மரத்தில் கொத்துக்கொத்தாகப் பூக்கும். இதன் நிறம் மஞ்சள். முல்லை கொடிப்பூ வகையைச் சேர்ந்தது. முல்லை மலர்கள் வெண்மை நிறங் கொண்டவை. நறுமணம் பரப்புவன. இவையும் கொத்துக்கொத்தாகவே மலரும். முல்லை இரவில் பூக்கும்.

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

3. **பொருத்தமான விடையைத் தேர்வு செய்க.**

- தன்மை, முன்னிலை, படர்க்கை என்பவை இதற்குள் அடங்கும்.

  இடம் திணை காலம் எண்

- வளி என்றால் காற்று. வலி என்றால்_______________.

  ஒலி ஔி

  பாதை நோவு

- பாற்பொங்கல்; இச்சொல்லைப் பிரித்து எழுதினால் _______________.

  பா+பொங்கல் பாற்+பொங்கல்

  பால்+பொங்கல் பாற்ப்+பொங்கல்

- குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நிலங்களை இவ்வாறு கூறுவர் ___________________.

  மாநிலம் நானிலம் நன்னிலம் நண்ணிலம்

- ஆக்கம் என்ற சொல்லின் எதிர்ப்பொருள் ___________________.

  எடுத்தல் வைத்தல் அழித்தல் காத்தல்

- போர்த்துக்கேயர் இலங்கையை வந்தடைந்த நூற்றாண்டு.

  14ம் நூற்றாண்டு 15ம் நூற்றாண்டு

  16ம் நூற்றாண்டு 17ம் நூற்றாண்டு

- நாம் எமது தாய் _______________ என்றும் மறக்கக்கூடாது.

  தந்தையரை பாட்டனாரை நண்பரை உறவினரை

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6

➢ புத்தர் இலங்கைக்கு வந்தது கிமு ________________ ஆம் ஆண்டளவில்.

400 500 600 700

➢ பெரியோர் ____________________ கேட்டு நடக்க வேண்டும்.

பாடலைக் அறிவுரையைக்

கற்பனைகளைக் திட்டைக்

➢ விழுமியம் என்ற சொல் குறிப்பது ________________.

கொடை உயர்வு

சிறப்பு ஏழ்மை

➢ ஒலி, வரி வடிவமாக ________________ அமையும்.

நாட்டியம் மொழி

ஓவியம் ராகம்

➢ ங், ஞ், ண், ந், ம், ன் என்பன ____________________.

மெல்லினமாகும் வல்லினமாகும்

இடையினமாகும் உயிரினமாகும்

➢ மூத்தோர் ________________ வார்த்தை அமிழ்தம்.

சொல் கேள்

பாடு ஆடு

➢ பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்?

5 6 7 8

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6

**4. ஒற்றெழுத்தைச் சேர்த்து எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எ.கா. | ➢ அவளை | + | கண்டேன் | = | <u>அவளைக் கண்டேன்</u> |
| | ➢ பாடலை | + | படித்தேன் | = | ______________ |
| | ➢ கடவுளை | + | கண்டேன் | = | ______________ |
| | ➢ பழத்தை | + | கடித்தேன் | = | ______________ |
| | ➢ கண்ணனுக்கு | + | கொடுத்தேன் | = | ______________ |
| | ➢ மதுரைக்கு | + | செல்வோம் | = | ______________ |
| | ➢ அவனை | + | பார்த்தேன் | = | ______________ |
| | ➢ பாலை | + | குடித்தேன் | = | ______________ |

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6

**5. பாட வினாக்களுக்கு விடை தருக.**

- மாமன்னன் எல்லாளன் இலங்கையை எத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்தான்?

- 'பண்பாடு' என்றால் என்ன?

- மூட ஆமை என்ற பாடல் உணர்த்தும் கருத்து யாது?

- குமண மன்னனைத் தேடிச் சென்ற புலவருக்கு மன்னன் எதைத் தர முன்வந்தான்?

- சான்றோர் எனப்படுபவர் யாவர்?

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6

**6. இலக்கண - மொழியியல் வினாக்களுக்கு விடை தருக.**

- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பன இடம்பெறுமாறு சொல்லியம் ஒன்று எழுதுக.

_______________________________________________

- பின்வரும் நிரற்கூட்டை நிரப்புக.

| | <u>பெயர்ச்சொல்</u> |
|---|---|
| இலங்கை | |
| கிளி | |
| நெற்றி | |
| உவர்ப்பு | |
| கோடை காலம் | |
| குயில் | |

- எடுத்துக்காட்டுத் தருக.

படர்க்கை: _______________________________________________

முன்னிலை: _______________________________________________

- பெயர்ச்சொற்கள் எத்தனை வகைப்படும்?

_______________________________________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6